570

தமிழர்

கருமாதி முறை

(வைணவம்)

5709
4-10

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1-DEC 1949
MADRAS

ஆக்கியோர் :
அ. கு. பாலசுந்தரனார், பி. ஏ., எல். டி.,
ஆசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

தனலட்சுமி பதிப்பகம்
திருவல்லிக்கேணி, சென்னை

1949

விலை
அணா 4

Y73(P31):345
N49
113058

தமிழர்

கருமாதி முறை

(வைணவம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - DEC 1949
MADRAS

ஆக்கியோர் :
அ. கு. பாலசுந்தரனுர், பி. ஏ., எல். டி.,
ஆசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

தனலட்சுமி பதிப்பகம்
திருவல்லிக்கேணி, சென்னை

1949

விலை அணு 4.

உரிமை ஆக்கியோருடையது

Y73(P31):345
N49

TAMIL NADU ARCHIVES LIBRARY
113058

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - DEC 1949
MADRAS

முன்னுரை

முற்காலத்தில் தமிழர்கள், இறந்தவரது உடலை வீட்டில் நீராட்டி, நல்லாடை உடுத்தி, அலங்கரித்துப் பூசனை செய்து, மயானத்துக்குக் கொண்டு போய்ப் பூமியில் புதைத்து, அவ்விடத்தில் இறந்தவரது தலைமாட்டில் ஒரு கல்லையும் (நடுகல்) நட்டு, அக்கல்லை இறந்தவரின் உடலாகப் பாவித்துக் காத்து, அதற்கு வாரம், மாதம் அல்லது வருடத்துக்கு ஒரு முறை வழிபாடும் செய்து வந்தார்கள்.

இறந்தவரை எண்ணி எண்ணி ஏங்கித் துன்புறும் அவரது குடும்பத்தைத் துயரத்திலிருந்து மாற்றுவதற்காக, இறந்தவரது உறவினரும், நெருங்கிய நண்பரும், அவரது வீட்டுக்கு வந்து தங்கியிருந்து, இறந்து 10 நாள் வரையிலும் அவரது சந்ததியாருக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டே வருவார்கள். பின் ஒரு நாளைக் குறித்து, அந்நாளில் இறந்தவருக்கு இறுதியான சடங்குகளைச் செய்து, அவருடைய சந்ததியினரில் மூத்தவரை இறந்தவருக்குப் பதிலாகக் குடும்ப காரியங்களைத் தலைமை வகித்து நடத்தும்படி நியமிக்க மயானத்திலேயே ஒன்று கூடுவார்கள். அப்படி நியமிக்கபடும் புதிய தலைவர், குடும்ப காரியங்களில் முதன்மை பெற்றதாகிய நீத்தார் வழிபாட்டைச் செய்யும் சடங்கு ஆதலால், இதற்குக் கருமாதி (கருமம் + ஆதி = முதல் செயல்) என்ற பெயர் வந்தது.

அக்காலத்தில் படமெடுப்பது கிடையாது. எனவே இறந்தவர்பால் உள்ள பாசத்தினால் அவருக்கு மீண்டும் மீண்டும் பூசனை செய்யவேண்டும் என்று விரும்பும் அவரது சந்ததியினர், உடலைப் புதைத்த இடத்தில் ஒரு கல்லை நாட்டி அதற்குப் பூசனை செய்து தங்கள் ஆவலை தீர்த்துக்கொள்வார்கள். இன்றும் சில தமிழர்கள் இவ்வழக்கத்தைப் பின்பற்றி மயானத்தில் கருமாதி செய்கிறார்கள்.

ஆனால் தமிழரில் பெரும்பான்மையோர் ஆரியரது வழக்கத்தை மேற்கொண்டு இறந்தவரது உடலை எரித்துவிடுகின்றனர். ஆகவே

கல் நாட்டுவதற்கும் மயானத்தில் கூடுவதற்கும் அவசியமின்றி, குளம் அல்லது ஆற்றின் கரையிலுள்ள உயர்ந்த மரத்தடியில் அல்லது ஒரு பூந்தோட்டத்தில் கூடி கருமாதியை இப்போது நடத்துகிறார்கள்.

இம்மாதிரி கருமாதியை நடத்துவோரிடம் இறந்தவரது புகைப்படம் அல்லது வர்ணப் படம் இருந்தால் அதையே வைத்து அலங்கரித்துப் பூஜிக்கலாம். ஓமம் வளர்த்தல் வேண்டியதே இல்லை. இம்முறையில் நமது நாட்டில் பலர் சுவைத்தே அறியாத நெய், பால், இளநீர், தேன் ஆகிய அரிய பொருள்களை கல்லின் மேல் கொட்டிப் பாழாக்கும் செயலுக்கு இடமே இல்லை. இறந்தவருக்குப் பிரியமான பலகாரங்களைப் படத்துக்கெதிரில் வைத்துப் படைத்து, ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கலாம். எனவே இம்முறை சுருக்கமும், நாகரிகமும் அறிவுடைமையும் கொண்ட சீரிய முறையாகும்.

மேற் சொன்னபடி படம் இல்லாதபோது, இறந்தவரைப் போன்று களிமண்ணால் ஒரு பதுமை செய்து அதற்கு வழிபாடு செய்யலாம். தமிழரிடை அதிகமாகப் பழக்கத்தில் இல்லாத காரணத்தால் இம்மாதிரி செய்ய விரும்பாதவர், புகைப்படம் எடுக்கவே தெரியாத காலத்தில் நம் முன்னோர்கள் செய்ததைப் போல, ஒரு சிறு கருங்கல்லை எடுத்துவந்து, அதை இறந்தவரது உடலாகப் பாவித்துப் பூசனை செய்யலாம். இதற்காகத்தான் இந்த சடங்குக்கு கல்லெடுப்பு (கல்+எடுப்பு) என்று பெயர் வந்தது.

ஆனால் மேலே கூறியுள்ள சுருக்கமான முறை தமிழரில் பலருக்குப் பிடிக்காது. அவர்களுக்கு உதவியாக சில ஆபாசமற்ற பொருளுடைய சடங்குகளை இந்நூலில் விவரித்திருக்கிறோம். பார்ப்பனப் புரோகிதர் செய்யும் சிற்சில அறிவுக்குப் புறம்பான சடங்குகளை ஆங்காங்கு எடுத்துக் காட்டியுள்ளோம். அவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு, அப்படிச் செய்வதால் தங்களுக்குக் கவுரவம் உண்டாகும் என்று நினைத்துத், தமிழர்களில் பணக்காரர்களா யிருப்போர் செய்யும், ஏமாற்றமும் ஆபாசமும் நிறைந்த சடங்குகளைக் கூறாது விடுத்தனம். உதாரணமாக, ஒரு பார்ப்பனர்

அல்லது பார்ப்பனத்தியை இறந்தவராகப் பாவித்து, அவருக்கு விலையுயர்ந்த உடைகளும், பாத்திரங்களும், கன்றையுடைய பசு முதலிய பெருங் கொடைகளும் அளித்து, அவரைப் பூசித்தல் ஆன 'ஏகோதிஷ்டம்' எனப்படும் சடங்கைச் செய்தல் ஒரு பெரிய ஏமாற்று வித்தையாகும்.

சுருங்கச் சொல்லுமிடத்து, ஒருவர் இறந்த பின் அவரது ஆவியானது இறைவனின் திருவடியை அடைந்து விடுகிறது என்பது தமிழரின் கொள்கை. இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் உயிருக்குத் தனியாக அபிஷேகம் எதற்கு? ஆராதனை எதற்கு? பிண்டப் பிரசாதம் எதற்கு? இறைவனது வழிபாட்டுக்கு அவைகள் எவ்வளவு அர்த்த மற்றனவோ அவ்வளவும் இறந்தவரின் வழிபாட்டுக்கும் அவைகள் அர்த்தம் அற்றவைகள் ஆகும்.

இறந்தவரது உயிர்கள் எல்லாம் தனித்து இயங்குவதாகக் கருதுவது ஆரியரின் கொள்கை; எனவே பார்ப்பனப் புரோகிதர் செய்யும் சடங்குகள் பெரும்பாலும் ஆரியருக்கே உரியன; தமிழருக்குப் பொருந்தா.

திருவல்லிக்கேணி,
17—8—1949

அ. கு. பாலசுந்தரன்

உள்ளுறை

			பக்கம்
1.	இறை வணக்கம்	...	7
2.	திருத்துழாய் அளித்தல்	...	8
3.	திருமந்திரம் ஓதுவித்தல்	...	9
4.	நீத்தார் கடன்		
	(1) கல் எடுப்பு	...	9
	(2) பிண்ட வழிபாடு	...	11
5.	எரியோம்பல்	...	15
6.	கொடை	...	18
7.	கருமத்துக் குரியவர் தலைவர் ஆதல்	...	19
8.	முடிவு	...	21
9.	உபசரிப்பு	...	22
10.	புண்யா வாசம்	...	23
11.	கருமாதி சடங்குக்கு வேண்டிய பொருள்கள்	...	25
12.	மாதிரி கருமாதி அழைப்பு இதழ்	...	26
13.	திவசம்	...	27

தமிழர்

கருமாதி முறை

(வைணவம்)

பழந் தமிழர்கள் கருமாதியை மயானத்திலேயே செய்து வந்தார்கள். ஆனால் இக்காலத்தில், கிராமங்களில் உள்ளோர் குளக்கரை, ஆற்றங்கரை முதலிய நீர் நிலைகளின் பக்கத்தில் இருக்கும் அரசமரம் முதலிய உயர்ந்த மரங்களின் கீழே போடப்பட்டுள்ள மேடைகளின் மேல் நடத்துகிறார்கள். பட்டணங்களில் உள்ளவர்கள் தோட்டங்களில் உள்ள கட்டடங்களிலும், இடமில்லாமற் போனால் மரங்களிடையிலும் இக் காரியத்தை நடத்திக்கொள்கிறார்கள்.

1. இறை வணக்கம்

ஆசிரியர் வடக்கு நோக்கி உட்காரவேண்டும். கருமத்துக்கு உரியவர் ஆசிரியருக்கு அருகில், கிழக்கு நோக்கி உட்கார வேண்டும். உடனே இந் நூலின் இறுதியில் 'கருமாதி சடங்குக்கு வேண்டிய பொருள்கள்' என்ற தலைப்பின்கீழ்க் குறிக்கப் பட்டுள்ளவைகளை யெல்லாம் தன்னருகில் வாங்கி வைத்துக்கொண்டு, ஆசிரியர் :

குடதிசை முடியை வைத்துக் குணதிசைப் பாதம் நீட்டி
வடதிசைப் பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி

கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுமாலோ ! என் செய்கேன் உலகத்தீரே !

—தொண்டரடிப்பொடியார்

என்ற பாடலைப்பாடி இறைவணக்கம் செய்யவேண்டும்.

2. திருத்துழாய் அளித்தல்

தொடக்கத்தில் பார்ப்பனப் புரோகிதர் இயற்றும் பிள்ளையார் பூஜை 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற கோட்பாடுடைய தமிழருக்குப் பொருந்தாதென்றும் நவக்கிரக பூஜை 'சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்' என்ற கொள்கையினையுடைய தமிழருக்கு ஆகாதெனவும், மற்றும் ஆவினில் ஐந்து, நிறை குடம், ஆகியவைகளின் வழிபாடும், உரியவர் பூணூல் அணிவதும், இக்காலத்துத் தமிழரின் பகுத்தறிவுக்குப்பொருந்தாதனவென்றும் விடுத்தனம்.

அவைகளுக்குப் பதிலாக வைணவர்களுக்கு இன்றியமையாதனவான திருத்துழாய், திருநாமம் ஆகியவற்றின் சிறப்புக்களை குடும்பத் தலைமையை ஏற்கப்போகும் உரியவருக்கு எடுத்துக்காட்டும் சடங்குகளை இங்கு நுழைத்திருக்கிறோம்.

ஆசிரியர் திருத்துழாயை ஒரு தட்டில் வைத்து அதில் கொஞ்சம் விரல்களினிடையே எடுத்துக் கொண்டு,

வாராயின முலையாளிவள் வானோர் தலைமகனும்
சீராயின தெய்வநன்னோய்இது தெய்வத் தண்ணந் துழாய்த்
தாராயினும் தழையாயினும் தண்கொம்ப தாயினும் கீழ்
வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே !

—நம்மாழ்வார்

என்ற பாட்டைப் பாடிப் பின் உரியவருக்குத் திருத்துழாயைக் கொடுத்து அணிந்துகொள்ளச் சொல்லவும்.

3. திருமந்திரம் ஓதுவித்தல்

வைணவர்கள் நாராயணனுடைய பெருமையையும், அவரது திருநாமத்தைப் பன்முறை சொல்வதனால் உண்டாகும் பயன் இன்னதென்பதையும் அறிய வேண்டியவராதலின், ஆசிரியர்

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆவன செய்யும்
நலந்தரும்சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம் !

மஞ்சுலாம் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வ நன்மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போது அழைமின் ! துயர்வரில் நினைமின் !
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா என்னும் நாமம் !

—திருமங்கை ஆழ்வார்

என்ற பாடல்களை ஓதி, உரியவரை 'நாராயணா' என்று மும்முறை சொல்லும்படிச் செய்ய வேண்டும்.

4. நீத்தார் கடன்

(1) கல் எடுப்பு

இது தான் கருமாதியில் இன்றியமையாத முக்கியமான சடங்கு.

இறந்தவரைக் குறிக்க ஒரு கல் வைத்து வழிபாடு செய்வதே போதுமானது. ஆனால் பார்ப்பனப் புரோகிதர் மூன்று சிறு கருங்கல் துண்டுகளை இச்சடங்கில் உபயோகிக்கிறார். அவைகள் இறந்தவரையும் அவரது தகப்பனையும் பாட்டனையும் குறிப்பனவாம்; எனவே இறந்தவருக்கே அன்றி, அவரது முன்னோர்களுக்கும் பூசை செய்வதாகப் பாவனை.

இம்மூன்று கற்களையும் கருமாதி காலத்தில் க்ஷவரம் பண்ணும் அம்பட்டனே கொண்டுவந்து கொடுப்பான்.

அக்கற்களை ஓர் அகன்ற தட்டின் மத்தியில் வைத்து அவைகளை, இறந்தவர் ஆணாயிருந்தால், இறந்தவர், அவரது தகப்பனார், பாட்டனாராகவும், தகப்பனார் உயிரோடிருந்தால், பாட்டனார், இரண்டாம் பாட்டனாராகவும் பாவிக்க வேண்டும். இறந்தவர் பெண்ணாயிருந்தால், அக்கற்களை இறந்தவர், அவரது மாமியார், மாமியாருக்கு மாமியாராகவும், மாமியார் உயிரோடிருந்தால், மாமியாருக்கு மாமியார், மூன்றும் மாமியாராகவும் கொள்ளவேண்டும். அக்கற்களில் நடுவில் இருப்பது இப்போது இறந்தவரைக் குறிக்கிறது. பின் நம் நாட்டில் 100க்கு 90 பேர் சுவைத்தே அறியாத பால், தயிர், இளநீர், தேன், எண்ணெய், சீக்காய் முதலிய அரிய பொருள்களைக் கொண்டு அக்கற்களுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

பிறகு அக்கற்களால் குறிக்கப்படுவோர் ஆணாயிருந்தால், அக்கற்களுக்கு திருமண்ணும் சந்தனமும், பூவும், சுமங்கலியா யிறந்த பெண்ணாயிருந்தால் மஞ்சளும் குங்குமமும், பூவும், விதவையா யிறந்த பெண்ணாயிருந்தால் வெறும் திருமண் மாத்திரமும் இட்டு, அவைகளை ஒரு தட்டில் இருத்தி, அதற்கென பச்சைத் தென்னை ஓலையை முடைந்து மடக்கிச், சங்கு ஊதும் பணிச்சவனால் செய்யப்பட்ட சிறு

பந்தரில் அத்தட்டை வைப்பார்கள். அப்பந்தரின் முன் வாழையிலை ஒன்றை விரித்து, அதில் பணிச்சவனால் பொங்கி வைக்கப்பட்ட சோற்றினால் செய்த 16 உருண்டைகளையும், பலகாரங்கள், பழங்களையும் வைத்துப் படைத்து, கருமத் துக் குரியவர் தீபாராதனை செய்து வணங்குவார்.

பின்பு இறந்தவரின் சம்பந்திகளில் ஒருவர் அத் தட்டைத் தூக்கி, உரியவரின் இடது தோளின்மேல் வைக்க, பணிச்சவன் சங்கூத, உரியவர் அதை எடுத்துக் கொண்டுபோய் அருகில் உள்ள குளம் அல்லது கிணற்றில் அக்கற்களை விட்டு விட்டுத் தலைமுழுகுவார். அப்போதே வீட்டிலிருப்பவர் எல்லாரும் முழுகுவதற்காக 'கல் தண்ணீ ரில் விழுந்து விட்டது' என்று ஓர் ஆளிடம் சொல்லி அனுப்புவார்கள்.

(2) பிண்ட வழிபாடு

இது கல்லெடுப்புக்கு அடுத்தாப்போல் உடனே செய்யப்படும் சடங்கு. இதைப் பார்ப்பனர் சபிண்டீ கரணம் என்பார்கள். சிலர் இதை கருமாதி நடந்த மறு நாள் தங்கள் வீட்டிலேயே நடத்திக் கொள்கிறார்கள்.

இரண்டு ஆழாக்கு பச்சை அரிசிமாவை ஓர் அகன்ற தட்டில் கொட்டி தண்ணீர் விட்டுப் பிசைந்து மூன்று உருண்டைகள் ஆக்கி, அவற்றை கல்லெடுப்பில் கற்களைப் பாவித்ததைப் போலவே பாவித்து, அலங்காரம், தூபதீபம் முதலிய ஆராதனைகளைச் செய்ய வேண்டும்.

பிறகு உரியவர் இறந்தவரைக் குறிக்கும் நடுவிலிருக் கும் உருண்டையிலும், மற்ற இரண்டில் ஒன்றிலும் ஒவ்வொரு சிறு பள்ளம் செய்து, அதில் சிலதுளி தேனைவிட்டுப், பிறகு அவ்விரண்டு உருண்டைகளையும் தன் இரண்டு உள்ளங்கைகளிலும் வைத்து, பின் ஒன்றாய்ச்

சேர்த்து, ஒரே பெரிய உருண்டையாகச் செய்துவிடவேண்டும். இறந்தவரை அவரது தகப்பனுடன் சேர்த்து விட்டோம் என்பது இதன் பொருள். பின்னர் மூன்ருவது பிண்டத்திலும் தேனைவிட்டு அதையும், பெரிய உருண்டையையும் ஒன்று சேர்த்து ஒரே உருண்டையாகச் செய்து, அவ்விரண்டு பேர்களையும் பாட்டனருடன் சேர்த்து விட்டதாகப் பாவிக்க வேண்டும். இறந்தவர் பெண்ணுயிருந்தால், அவருடைய மாமி, மாமிக்கு மாமியுடன் சேர்த்து விட்டதாகப் பாவனை.

பிறகு அப் பெரிய உருண்டையைத் தட்டில் வைத்து எடுத்துக் கொண்டுபோய் குளத்தில் அல்லது கிணற்றில் விட்டுவிட்டு, மறுபடியும் முழுகவேண்டும்.

மேற்கூறிய மாதிரி கற்களுக்கோ, பிண்டங்களுக்கோ நீராட்டல், அலங்கரித்தல், படைத்தல் முதலிய வழிபாடுகளை நடத்தும்போது கீழ்க்கண்ட பாடல்களை ஆசிரியர் மெதுவாகப் பாடிக் கொண்டிருக்க வேண்டும்; முடிந்து விட்டால் திருப்பித் திருப்பியும் பாடலாம். அப்பாடல்கள் நீராட்டல் முதலிய வினைகளைப் பற்றிய பாடல்கள் அல்ல; என்ருலும், கருமத்துக்கு உரியவர், கருமாதியைக் காண வந்திருப்போர் ஆகியவர்களுக்கு யாக்கை நிலையாமையை எடுத்துக்காட்டி, அவர்களின் உள்ளத்தை உருக்கித், தீய எண்ணங்களை அகற்றிப், புனிதமாக்கி, இறைவன்பால் செல்லும்படிச் செய்ய வல்லவை ஆகையால் இச் சடங்கு நடைபெறும்போது ஓதுவதற்குப் பெரிதும் தகுதி வாய்ந்தவை ஆகும்.

ஆசைவாய்ச் சென்ற சிந்தையர் ஆகி
அன்னை அத்தன்என் புத்திரர் பூமி
வாசவார் குழலாள் என்று மயங்கி
மாளும் எல்லைக்கண் வாய்திற வாதே

கேசவா ! புருடோத்தமா ! என்றும்
கேழலாகிய கேடிலீ ! என்றும்
பேசுவார் அவர் எய்தும் பெருமை
பேசுவான் புகில் நம்பரம் அன்றே !

சீயினால் செறிந்தேறிய புண்மேல்
செற்றலேறிக் குழம்பிருந்து எங்கும்
ஈயினால் அரிப்புண்டு மயங்கி
எல்லைவாய்ச் சென்று சேர்வதன் முன்னம்
வாயினால் நமோ நாரணா வென்று
மத்தகத்திடைக் கைகளைக் கூப்பிப்
போயினால் பின்னை இத்திசைக் கென்றும்
பிணை கொடுக்கிலும் போக வொட்டாரே.

சோர்வினால் பொருள் வைத்தது உண்டாகில்
சொல்லு சொல்என்று சுற்றும் இருந்து
ஆர்வினவிலும் வாய் திறவாதே
அந்தக் காலம் அடைவதன் முன்னம்
மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே !

மேல் எழுந்ததோர் வாயுக் கிளர்ந்து
மேல் மிடற்றினை உள் எழ வாங்கி
காலும் கையும் விதிர் விதிர்த் தேறிக்
கண் உறக்கமது ஆவதன் முன்னம்
மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை
மூன்று மாத்திரை உள் எழ வாங்கி
வேலை வண்ணனை மேவுதிர் ஆகில்
விண் அகத்தினில் மேவலும் ஆமே !

மடிவழி வந்து நீர் புலன்சோர
வாயில் அட்டிய கஞ்சியும் மீண்டே
கடைவழி வாரக் கண்டம் அடைப்பக்
கண் உறக்கமது ஆவதன் முன்னம்
தொடை வழி உம்மை நாய்கள் கவரா
சூலத்தால் உம்மைப் பாய்வதும் செய்யார்
இடைவழியில் நீர் கூறையும் இழவீர்
இருடீகேசன் என்று ஏத்த வல்லீரே !

அங்கம் விட்டவை ஐந்தும் அகற்றி
ஆவி மூக்கினில் சோதித்த பின்னை
சங்கம் விட்டவர் கையை மறித்துப்
பையவே தலை சாய்ப்பதன் முன்னம்
வங்கம் விட்டு உலவும் கடற்பள்ளி மாயனை
மது சூதனை மார்பில்
தங்க விட்டு வைத்து ஆவதோர் கருமம்
சாதிப்பார்க்கு என்றும் சாதிக்கலாமே !

தென்னவன் தமர் செப்பம் இலாதார்
சேவதக்குவார் போலப் புகுந்து
பின்னும் வன் கயிற்றால் பிணித்தெற்றிப்
பின் முன்னாக இழுப்பதன் முன்னம்
இன்னவன் இனையான் என்று சொல்லி
எண்ணி உள்ளத்து இருள் அற நோக்கி
மன்னவன் மதுசூதனன் என்பார்
வானகத்து மன்று ஆடிகள் தாமே !

கூடிக்கூடி உற்றார்கள் இருந்து
குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து
பாடிப்பாடி ஓர் பாடையில் இட்டு
நரிப்படைக்கு ஒரு பாகுடம் போலே

கோடிமூடி எடுப்பதன் முன்னம்
    கௌவத்துவம் உடைக் கோவிந்த னோடு
கூடி ஆடிய உள்ளத்தர் ஆனல்
    குறிப்பிடம் கடந்து உய்யலும் ஆமே!

வாய்ஒரு பக்கம் வாங்கி வலிப்ப
    வார்ந்த நீர்க்குழிக் கண்கள் மிழற்ற
தாய்ஒரு பக்கம் தந்தையொர் பக்கம்
    தாரமும் ஒருபக்கம் அலற்ற
தீயொரு பக்கம் சேர்வதன் முன்னம்
    செங்கண் மாலொடும் சிக்கெனச் சுற்றம்
ஆய்ஒரு பக்கம் நிற்க வல்லார்க்கு
    அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே!

—பெரியாழ்வார்

5. எரியோம்பல் (ஓமம் வளர்த்தல்)

நீத்தார் வழிபாடு முடிந்தவுடன், உரியவர் முழுகிவிட்டு, சுத்தமான உடைதரித்துக்கொண்டு, நெற்றியில் திருமண் அணிந்துகொண்டு, ஆசிரியர் முன்வந்து மணையில் அமர வேண்டும். பிறகு ஆசிரியர் எரியோம்பலை நடத்தவேண்டும்.

ஓமத்தில் எரிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள சுள்ளிக் கட்டுகளிலிருந்து ஒரு நீண்ட நேரான சுள்ளியை எடுத்து அதன் முனையில் ஒரு சிறு மாவிலையை மடக்கிக் கட்டிக் காண்டியைப்போல செய்து வைத்துக்கொள்ள வேண்டும். சுள்ளிக் கட்டுகளில் மெல்லியதாய் உள்ள 2, 3 கட்டுகளை மாத்திரம் உபயோகித்து விட்டு, மற்றவை களை ஒரு மூலையில் ஒதுக்கி வைத்துவிட வேண்டும். எல்லாக் கட்டுகளையும் எரிக்க வேண்டியதில்லை. பின்பு கருமத்துக்கு உரியவருக்கு எதிரில், தரையில் மணலைப்

113058
Y73(P31):346
N49

பரப்பி, அல்லது ஒரு முழு வறட்டியை வைத்து, ஒரு பெரிய கற்பூரக் கட்டியை (சூடன்) விளக்கில் கொளுத்தி, அந்த வறட்டியின்மேல் வைத்து, அந்தச் சுடரின்மேல் முதலில் தர்ப்பைக் கட்டையும், அதன் பின் மெல்லிய சுள்ளிகளையும் ஒவ்வொன்றாக வைக்க வேண்டும். அவை பற்றி எரியும்போது நெய்க்கிண்ணத்தை அந்தச் சுடரில் காட்டி, நெய் கொஞ்சம் உருகியபின், அதைச் சிறிது சிறிதாக முன்னமே தயாரித்து வைக்கப் பட்டுள்ள மாவிலைக் காண்டியால் எடுத்துச் சுள்ளிகளின் மேல் விட்டுப் பெரிய சுடர் தோன்றியவுடனே, ஆசிரியர் அதை இறைவனின் சோதி வடிவமாகப் பாவித்து,

பொன்னானாய்! பொழில்ஏழும் காவல் பூண்ட
புகழானாய்! இகழ்வாய தொண்டனேன் நான்
என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
என்று அறிவன் ஏழையேன் உலகம் ஏத்தும்
தென்னானாய்! வடவானாய்! குடபாலானாய்!
குணபாலம தானாய்! இமையோர்க்கு என்றும்
முன்னானாய்! பின்னானார் வணங்கும் சோதீ!
திருமூழிக் களத்தானாய் முதலா னாயே!

—திருமங்கை ஆழ்வார்

என்ற பாடலைப் பாடி, சோதி வணக்கம் செய்ய வேண்டும். பிறகு நெய்க் கிண்ணத்தை உரியவருக்கு அருகில்வைத்து மாவிலைக் காண்டியால் நெய்யைச் சிறிது சிறிதாக எடுத்து எரியில் சொரியும்படிச் சொல்லிவிட்டு, ஆசிரியர் கீழ்க்கண்ட பாடல்களை வியப்புக் குறி(!) காணும் இடங்களில் எல்லாம் நிறுத்திப் பாடிக்கொண்டும் சுள்ளிகளை ஒவ்வொன்றாக எரியில் வைத்துக்கொண்டும் இருக்கவேண்டும்.

புகழுநல் ஒருவன் என்கோ ! பொருவில் சீர்ப்பூமி என்கோ !
திகழுந் தண்பரவை என்கோ ! தீஎன்கோ ! வாயு என்கோ !
நிகழும் ஆகாசம் என்கோ ! நீள்சுடர் இரண்டும் என்கோ !
இகழ்வில் இவ்அனைத்தும் என்கோ ! கண்ணனைக் கூவுமாறே!

கூவுமா றறிய மாட்டேன் குன்றங்க ளனைத்து மென்கோ
மேவுசீர் மாரி என்கோ விளங்கு தாரகைக ளென்கோ
நாவியல் கலைக ளென்கோ ஞானநல்லாவி யென்கோ
பாவுசீர் கண்ணனெம்மான் பங்கயக் கண்ணனையே !

பங்கயக் கண்ணன் என்கோ ! பவளச் செவ்வாயன் என்கோ !
அங்கதிர் அடியன் என்கோ ! அஞ்சன வண்ணன் என்கோ !
செங்கதிர் முடியன் என்கோ ! திருமறு மார்வன் என்கோ !
சங்கு சக்கரத்தன் என்கோ ! சாதி மாணிக்கத் தையே !

சாதிமாணிக்க மென்கோ சவிகொள் பொன்முத்தமென்கோ
சாதி நல்வயிரமென்கோ தவிசில்சீர் விளக்கமென்கோ
ஆதியஞ்சோதி யென்கோ ஆதியெம் புருடனென்கோ
ஆதுமில்காலத் தெந்தை அச்சுதன் அமலனையே !

அச்சுத னமலனென்கோ அடியவர் வினை கெடுக்கும்
நச்சுமா மருந்த மென்கோ நலங்கட லமுதமென்கோ
அச்சுவை கட்டி யென்கோ அறுசுவை யடிசிலென்கோ
நெய்ச்சுவை தேறலென்கோ கனியென்கோ பாலென்கேனோ.

பாலென்கோ நான்கு வேதப்பய னென்கோ சமயநீதி
நூலென்கோ நுடங்கு கேள்வி இசையென்கோ இவற்றுள்நல்ல
மேலென்கோ வினையின் மிக்க பயனென்கோ கண்ணன்
என்கோ மாலென்கோ மாயனென்கோ வானவ ராதியையே.

வானவராதி யென்கோ வானவர் தெய்வமென்கோ
வானவர் போகமென்கோ வானவர்முற்று மென்கோ
ஊனமில் செல்வமென்கோ ஊனமில் சுவர்க்கமென்கோ
ஊனமில் நோக்கமென்கோ ஒளிமணி வண்ணனையே !

ஒளிமணி வண்ணன் என்கோ ஒருவனென்றேத்த னின்ற
நளிர்மதிச் சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ
அளிமகிழ்ந்துலக மெல்லாம் படைத்தவை யேத்தனின்ற
களிமலர்த்துளவ னெம்மான் கண்ணனை மாயனையே!

கண்ணனை மாயன்தன்னை கடல்கடைந்தமுதம் கொண்ட
அண்ணலை அச்சுதனை அனந்தனை அனந்தன் தன்மேல்
நண்ணி நன்குறைகின்றானை ஞாலமுண்டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறியமாட்டேன் யாவையும் யவருந்தானே!

—நம்மாழ்வார்

ஷ பாடல்களைப் பாடி முடித்தவுடனே ஆசிரியர் நெய்க்கிண்ணத்தை எடுத்து எரியின்மீது கவிழ்த்து விட்டு, உரியவரைக் கை கூப்பித் தொழும்படிச் சொல்லி,

கருமா முகில் உருவா! கனல் உருவா! புனல் உருவா!
பெருமால் வரை உருவா! பிறஉருவம் நினதுருவா!
திருமாமகள் மருவும் சிறுபுலியூர்ச் சலசயனத்து
அருமா கடல் அமுதே! உனது அடியே சரணமே!

—திருமங்கை ஆழ்வார்

என்ற பாடலைப் பாடி எரி ஓம்பலை முடிக்க வேண்டும்.

6. கொடை (தானம்)

எரியோம்பல் முடிந்தவுடன் வாழை இலைகளில் அரிசி, பருப்பு, காய்கறி வகைகள், வெற்றிலைப் பாக்கு வைத்து உண்டானல் பணமும் வைத்து, இச்சடங்குகளில் பங்கெடுத்துக் கொண்ட அம்பட்டன், பணிச்சவன் முதலானோர்க்கும், அங்கு வந்து கூடியுள்ள ஏழை எளியவர்களுக்கும் படைத்து அவர்கள் எல்லாரும்,

"காலஞ் சென்ற எஸ். வேலாயுத நாயகரின் ஆவி அமைதி உறுக"

என்று மும் முறை சொல்லிவிட்டு எடுத்துக் கொண்டு போகும்படிச் செய்யவும்.

7. கருமத்துக்குரியவர் தலைவர் ஆதல்

இந்தச் சடங்கைச் சிலர் ‘சுபஸ்வீகாணம்’ ‘தலைக்கட்டுதல்’ ‘கிருஹ ஐக்கியம்’ என்றெல்லாம் சொல்வார்கள். சிலர் கல்லெடுப்போடு முதல்நாள் சடங்குகளை நிறுத்திக் கொண்டு, மூன்றும் நாளில் வீட்டிலேயே இச்சடங்கை நடத்திக் கொள்வார்கள்.

கொடை முடிந்தவுடன் ஆசிரியர் உரியவரை மணையில் இருத்தி, அவரிடம் தலைப்பாகை ஒன்றைக் கொடுத்துத் தரித்துக் கொள்ளும்படிச் சொல்லி, அவருடைய பங்காளிகளையும் அவருடன் வரிசையாக உட்காரும்படிச் சொல்லவும். அப்போது உரியவர் தனது பங்காளிகளின் சம்மதத்துடன் தனது குடும்பத்துக்குத் தலைமை பூண்டதாகக் கருதப்படுவார். அப்போது ஆசிரியர் உரியவருக்கு மீண்டும் தேறுதல் கூறும் முறையில்,

இல்லை அல்லல் உனக்கேல் இனி என்குறை
அல்லிமாதர் அமரும் திரு மார்பினன்
கல்லிலேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல நாளும் துயர்பாடு சாராவே!

கடுவினை களையலாகும் காமனைப் பயந்த காளை
இடவகை கொண்ட தென்பர் எழிலணி அனந்தபுரம்
படமுடை யரவில் பள்ளி பயின்றனன் பாதம்காண
நடமினோ நமர்கள் உள்ளீர் நாமுமக் கறியச் சொன்னோம்.

இப்போது உரியவரின் நெருங்கிய சுற்றத்தார் அந்த நெருக்கத்தின் முறையில் உரியவரையும் அவரது பங்காளிகளையும் வாழ்த்தி ஆடைகளைப் பரிசாக அளிக்கத் தயாரா

யிருப்பார்கள். அவர்களிடமிருந்து அப்பரிசுகளை ஒவ்வொன்றாய் ஆசிரியர் வாங்கித் தட்டில் வைத்து, பூவும் வெற்றிலைப் பாக்கும் வைத்து,

"காலஞ் சென்ற எஸ். வேலாயுத நாயகரின் கருமாதியின்போது, தோழர் நுங்கம்பாக்கம் சுப்பிரமணிய நாயகர், தனது அம்மான் தோழர் எஸ். தருமலிங்க நாயகருக்கு, அளித்த பரிசு"

என்று சொல்லி, அது யாருக்குச் சேரவேண்டுமோ அவரது கையில் கொடுக்கவேண்டும். பரிசுகள் எல்லாம் வழங்கி ஆனபிறகு ஆசிரியர், கருமத்துக்கு உரியவரை தனக்கும் தனது பங்காளிகளுக்கும் பரிசுகளை வழங்கினவர்களுக்குச் சந்தனம், பூக்கள், வெற்றிலைப் பாக்கு வழங்கி உபசரிக்கும்படிச் செய்யவேண்டும்.

பிறகு உரியவரையும் பங்காளிகளையும் எழுந்து போய் புத்தாடைகளை அணிந்துகொண்டு வந்து சபையில் அமரும்படிச் சொல்லவும். உடனே ஆசிரியர் கையில் மலர்கள் தாங்கி,

வன்பெரு வானகம் உய்ய! அமரர் உய்ய! மண்உய்ய!
  மண்ணுலகினில் மனிதர் உய்ய!
துன்பமிகு துயர் அகல! அயர் **ஒன்றில்லாச் சுகம் வளர!**
  அகமகிழும் தொண்டர் வாழ!
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்
  அணி அரங்கன் **திருமுற்றத்து அடியார்தங்கள்**
இன்பமிகு பெருங்குழுவு **கண்டு யானும்**
  இசைந்துடனே என்றுகொலோ இருக்கும் நாளே!

—திருமங்கை ஆழ்வார்

என்ற பாடலைப் பாடி, அப்பாடலில் தடித்த எழுத்துள்ள சொற்களைச் சொல்லும்போதெல்லாம் தன் கையிலுள்ள மலர்களை அவர்கள்மீது சொரிந்து வாழ்த்தவும்.

பிறகு, இறந்தவரைப் பற்றிய சாம கவிகள் முதலியன வாசித்தல், இறந்தவரின் குணாதிசயங்களைப் பற்றிப் பேசுதல், புதிய தலைவருக்கு அறவுரை எடுத்துக் கூறல் முதலிய சொற்பொழிவுகள் நடைபெறலாம்.

8. முடிவு

இப்போது பார்ப்பனப் புரோகிதர் ஒரு வாழைப் பூ செம்பில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி, அதன் வாயில் 4 மாவிலைகளைச் செருகி, அவைகளின்மீது குடுமியுள்ள ஒரு தேங்காயை வைத்து, அத்தேங்காய்க்கும் செம்புக்கும் மஞ்சள் குங்குமம் இட்டு, சிறிய பூமாலை ஒன்று சூட்டி, திருவிளக்கின் அடிப்பாகத்துக் கருகே வைப்பார். இந்தச் செம்பிலுள்ள நீரில் இறந்தவரின் ஆவியை அடைத்து வைத்திருப்பதாகப் பாவனை. பிறகு ஒரு சிறு தட்டில் கற்பூரம் ஏற்றித் திருவிளக்குக்குக் காட்டி, உரியவரையும் அவருடன் அமர்ந்துள்ள பங்காளிகளையும் கைகூப்பித் தொழும்படிச் சொல்லிவிட்டு,

அடியோ மோடும் நின்னோடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு!
வடிவாய் நின்வல மார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு!
வடிவார் சோதி வலத்து உறையும்
சுடர் ஆழியும் பல்லாண்டு!
படைபோர் புக்கு முழங்கும்
அப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே!

—பெரியாழ்வார்

என்ற பாடலைப் பாடவும். பிறகு,

வாழ்க தமிழ்மொழி!
வாழ்க நல் தமிழர்கள்!

வாழ்க தமிழகம் !
வாழ்க தமிழ்ப் பெரியார் !

என்ற வாழ்த்துப் பாடி இவ்வினையை முடிக்கவும்.

9. உபசரிப்பு

பின்பு ஆசிரியர் ஒரு தட்டில் வெற்றிலைப்பாக்கு சந்தனம் பூக்கள் ஆகியவைகளை வைத்துக் கொண்டுவரச் சொல்லி, முதலில் கோயில், சங்கம், பத்திரிகைகள் முதலியவைகளுக்கு இக்காரியத்தை முன்னிட்டு ஏதாவது நன்கொடை அளிப்பதாக இருந்தால், அதை வாங்கி அவ்வவற்றிற்கு உரியவர்களுக்குச் சந்தனம், பூக்கள், வெற்றிலைப் பாக்கோடு வழங்கவேண்டும். பிறகு கருமாதியைக் காண வந்திருப்போர் எல்லோருக்கும் சமத்துவமாய் (அய்யன்மாருக்கு முன்னே, அன்னியருக்குப்பின்னே, நம்மவருக்கு கடைசியில் என்ற மானக்கேடான முறையைக்கையாளாமல்) தாம்பூலம், பூ, சந்தனம் முதலியவைகளை மேற்சொன்னபடி வழங்கி உபசரிக்க வேண்டும். பிறகு கருமத்துக்கு உரியவர் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் வாழைப்பூ செம்பைக் கையில் ஏந்திப் போக, எல்லாரும் எழுந்திருந்து அவருடன் மனைக்குப்போக வேண்டும். மனை வாயிலில் உரியவருக்கு ஆலஞ் சுற்றிக் கண்ணேறு கழித்தபின், மனைபுகுந்து, அங்கே நடுவீட்டில் அலங்கரித்து வைத்துள்ள இறந்தவரின் படம் அல்லது உடைகளுக்கு முன்னே உரியவர் கையில் ஏந்திவந்த வாழைப் பூ செம்பை வைத்து, சோறும் கறியும் பழமும் பலகாரமும் படைத்துப் பூசனை செய்தபின் எல்லாரும் உரியவரோடு விருந்துண்பது வழக்கம்.

புண்யாவாசம்

இதைச், சிலர் கருமாதியைத் தோட்டத்தில் நடத்தி விட்டு வீட்டுக்கு வந்தவுடனே, சாப்பாட்டுக்கு முன்னே நடத்திக் கொள்வார்கள். சிலர் இதை மறுநாள் எண்ணெய் தேய்த்துக்கொண்டு முழுகிவிட்ட பிறகு செய்துகொள்வார் கள். சிலர் இதை வீட்டில் தீட்டு என்று கருதப்படும் சம்பவங்கள் நடந்த பிறகும் செய்துகொள்வார்கள். உதாரண மாக, குழந்தை இறந்துபோனல், இறந்த 10-வது நாள் கருமாதிக்குப் பதிலாகச் செய்து கொள்வார்கள். குழந்தை பிரசவம் நடந்த பிறகும், பெண் ருதுவான போதும் சிலர் இதைச் செய்து, ஷ சம்பவங்களினல் அசுத்தமாக்கப்பட்ட தங்கள் வீட்டைச் சுத்தமாக்கிக் கொண்டதாக நினைப்பார்கள். இது ஒரு பெரிய ஏமாற்றம். உண்மையில் ஷ சம்பவங்களை நல்ல காரியங்களாகவே கருதவேண்டும். அவைகளுக்காக புண்யாவாசம் என்னும் சடங்கு தேவையேயில்லை. வேண்டுமென்று தோன்றினல் கீழ்க்கண்ட முறையைக் கையாளலாம்.

ஆசிரியர் ஒரு வாழையிலையின்மேல் ஒரு தொன்னையை வைத்து அதில் கோமூத்திரம், சாணம், நெய், பால், தயிர் ஆகியவைகளை(ஆவினில் ஐந்து) சிறிது சிறிதாக இட்டு, அவற் ருேடு ஒரு வாழைப்பழத்தையும் சேர்த்துப் பிசைந்து வைப் பார். அதற்கு அப்பால் ஒரு வாழைப்பூ செம்பில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றி 4, 5 மாவிலைகளை அதன் வாயில் செருகி, அவைகளினிடையே ஒரு நாருரித்த தேங்காயை வைத்து, அதற்கு மஞ்சள் பூசிக் குங்குமம் இட்டு, மாலைசூட்ட வேண்டும். அக் கலசத்தின் எதிரில் வெற்றிலைபாக்கு, பழம் முதலியவைகளை வைக்கவும்.

அதற்குப் பின்னே குத்துவிளக்கு ஒன்றை ஏற்றி வைக்கவேண்டும். ஆசிரியர் முதலில், பக்கம் 7-ல் கண்டபடி இறைவணக்கமும், குழந்தையின் தந்தையைக்கொண்டு பக்கம் 16-ல் கண்டபடி சோதி வழிபாடும் நடத்திப், பின் ஆவினில் ஐந்துக்கும் பூசை நடத்தி, வீட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் அதைச் சிறிது சிறிதாகக் கொடுத்து, சாப்பிடும்படிச் சொல்லவும். அதனுல் அவர்களுடைய உடல்கள் பரிசுத்தமாய் விட்டதாகக் கருதப்படும்.

பின் ஆசிரியர் எழுந்து கலசச் செம்பைக் கையில் எடுத்துக்கொண்டு அதில் உள்ள புண்ணிய தீர்த்தத்தை மாவிலையால் தோய்த்து எடுத்து, வீட்டில் உள்ள எல்லா அறைகளின் சுவர்களின்மேலும் தெளிக்க வேண்டும். அதனுல் அவ்வறைகள் எல்லாம் பரிசுத்தமடையும்.

அப்போது அவ்வீட்டில் உள்ளவர்கள் தீட்டுப் போய், பரிசுத்தமான உடல்களோடு புண்ணியமான இடத்தில் வாசம் செய்வதாகக் கருதப்படுவர்.

கருமாதி சடங்குக்கு வேண்டிய பொருள்கள்

இறந்தவரின் படம், பதுமை, அல்லது 3 கற்கள்
மணி - ஆசிரியருக்கு
திருத்துழாய் - தட்டில்
சந்தனம் - கிண்ணத்தில்
ஆழ்ந்த தட்டு - 1, சாதாரண தட்டு - 1
பால், தயிர், இளநீர், தேன்
எண்ணெய், சீக்காய்த் தூள்
தண்ணீர் - பெரிய செம்பில்
சிறு செம்பு - 1
வாழைப்பூ செம்பு
அரைத்த மஞ்சள், குங்குமம்
மாவிலைக்கொத்து
பூச்சரங்கள்
பலகாரங்கள், பழங்கள்
தேங்காய் - 1
கற்பூரம், சாம்பிராணி
தூபகலசம் அல்லது சிறு தட்டு
உதிரிப் பூக்கள் - தட்டில்
வெற்றிலைப்பாக்கு - தட்டில்
குத்துவிளக்கு
வாழையிலைகள்

பொங்கல் இடுவதாய் இருந்தால்
சிறுபானை
வறட்டிகள்
பச்சரிசி $\frac{1}{4}$ படி

ஓமம் வளர்த்துவதா யிருந்தால்,
மணல்
எருமுட்டை
சுள்ளிக் கட்டு
நெய் - கிண்ணத்தில்
மாவிலை

பிண்டம் இடுவதாய் இருந்தால்
வாழை இலை
பச்சரிசி மா $\frac{1}{4}$ படி
பித்தளை போகணிச்சட்டி

தானம் கொடுப்பதாய் இருந்தால்
வாழை இலைகள்
அரிசி, பருப்பு, பயறு, உப்பு
காய்கறி வகைகள்
தயிர், நெய்
சில்லரைக் காசுகள்

மாதிரி கருமாதி அழைப்பு இதழ்

நீத்தார் வழிபாடு

13, அப்புமுதலி தெரு,
மயிலாப்பூர், 26-9-1941

அன்புள்ள ஐயா,

நிகழும் விசு ஆண்டு புரட்டாசித் திங்கள் 17-ம் நாள் (3-10-1941) வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இறைவன் திருவடி அடைந்த எனது தம்பி எஸ். வேலாயுத நாயகருக்கு, புரட்டாசித் திங்கள் 29 ம் நாள் (15-10-41) புதன்கிழமை இரவு மேல் கண்ட என் இல்லத்தில் நடப்பும், மறுநாள் வியாழக்கிழமை (16-10-41) காலே 8 மணிக்கு, திருமயிலேக் கபாலீசுரர் திருக்குளத்தின் தென்கரையில் நீத்தார் வழி பாடும் நடைபெறும். அச்சடங்குகளில் கலந்து கொள்ளும் படித் தங்களே வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம் தங்கள் அன்பன்
எஸ். தருமலிங்க நாயகர்

தங்கள் வரவை எதிர்பார்க்கும் :—

என். நாராயணசாமி நாயகர், கே. முருகேச நாயகர்
எஸ். தக்ஷிணமூர்த்தி நாயகர், பொன்னுசாமி நாயகர்

திவசம்

வருடத்துக்கு ஒரு முறை இறந்தநாளில் திவசம் (திதி) என்று சொல்லப்படும் ஒரு சடங்கு நடத்தப்படுகிறது. அன்று பார்ப்பனப் புரோகிதரைக்கொண்டு கருமாதியில் நடந்த எல்லாச் சடங்குகளையும் நடத்திக் கொள்கிறார்கள். க்ஷவரம் செய்து கொள்வது மாத்திரம் கிடையாது; மூன்று நற்களுக்குப் பதிலாக, பச்சரிசி, பச்சைபயறு, பால், பழம் எல்லாவற்றையும் கலந்து பிசைந்து 3 உருண்டைகளாகத் தருப்பையின் மேல்வைத்துப் பூசைசெய்து, பசுவுக்குக் கொடுத்து விடுகிறார்கள். இதெல்லாம் வீணான செயல்கள் ஆகும்.

இறந்தவருடைய படத்தை, அல்லது படம் இல்லாமற் போனால், அவர் அணிந்திருந்த உடைகளில் முக்கியமான சிலவற்றை அவருடைய அடையாளமாக நடுவீட்டில் வைத்து, அலங்கரித்து, அவருடைய அருமை பெருமைகளைச் சிறிது நேரம் நினைத்து அல்லது உடன் இருப்பார்க்குச் சொல்லி வணங்குவதும், கூடுமானால் அந்நாளில் அவருடைய பெயரைச் சொல்லி, ஏழை எளியவர்களுக்குச் சாப்பாடு போடுவதும் சாலச் சிறந்த முறையாகும்.

113058
Y73 (P.31) : 345
N49

எங்கள் மற்ற வெளியீடுகள்:

1. **தமிழர் திருமண முறைகள்** 0 8 0

தமிழர் வீடுகளில் நடக்கும் கல்யாணம் மருவிலக்கம், சீமந்தம் முதலிய எல்லா சுபகாரியங்களையும் செய்யும் முறைகளை விவரிக்கிறது.

சைவர், வைணவர்களுக்குத் தனித் தனியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

2. **திராவிட நாடு (முதல் பாகம்)** 2 0 0

தென்னாட்டின் நீர்வளம், நிலவளம், மலைவளம், விளைபொருள்கள், சுரங்கப் பொருள்கள், மின்சார உற்பத்தி, வியாபாரங்கள், துறைமுகங்கள் முதலிய சகல விஷயங்களையும் புள்ளி விவரங்களுடன் எளிய நடையில் தெளிவாக விளக்குகிறது.

ஆசிரியர் அ. கு. பாலசுந்தரனார், பி.ஏ., எல்.டி. அவர்களால் இயற்றப் பட்டு திரு. வி. க. அவர்களின் மதிப் புரையுடன் கூடியது. கிளேஸ் காகிதம் 276 பக்கம்.

மதிப்புரைகள்

திராவிட நாட்டில் பிறந்தவர் யாவருமே அவசியம் படித்தறிய வேண்டிய அரும் பெரும் களஞ்சியம் இது.

—விடுதலை

தோழர்களின் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றி வைத்துள்ளார் இந் நூலாசிரியர். கழகத் தோழர்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய நூல் இது.

—திராவிடநாடு

10 புத்தகங்களுக்குக் குறையாமல் வாங்குகிறவர்களுக்கு 25 சதவிகிதம் கழிவு உண்டு.

தனலட்சுமி பதிப்பகம்

திருவல்லிக்கேணி, சென்னை

சாது அச்சக்கூடம் சென்னை - 14